www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2021

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் Christianity | One Hours / Gr -12 (2022) | 43 | T | I,II |

- ***மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து தரப்பட்ட தாளில் புள்ளடி இடுக.***

### பகுதி I

1) பிரபஞ்சத்தின் படைப்பாளரான இறைவன் மனிதனுக்குத் தன்னை வெளிப்படுத்துவது
   1) இறை ஏவுதல் 2) இறை வெளிப்பாடு 3) இறை ஊக்கம்
   4) சுயவெளிப்பாடு 5) வெளிப்படுத்தல்

2) இணைத் திருமுறை நூல்களில் உள்ளடங்காத நூல்
   1) சீராக்கின் ஞானம் 2) தோபித்து 3) தானியேல்
   4) பாரூக் 5) யூதித்து

3) தூய ஜெரோம் அவர்களால் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியப் பிரதி
   1) வல்கேற் 2) மசரோட்டிக் 3) செப்துவாஜித்
   4) கிரேக்கம் 5) எபிரேயம்

4) பாலஸ்தீனாவின் அமைவிடம் காணப்படுவது,
   1) தெற்காசியப் பகுதி 2) மேற்கு ஆசியாப் பகுதி 3) தென்கிழக்கு ஆசியாப் பகுதி
   4) மத்திய தரைப் பகுதி 5) கிழக்காசியாப் பகுதி

5) இயேசு வளர்ந்த இடமாகிய நாசரேத்து அமைந்துள்ள பிரதேசம்
   1) வடக்கு கலிலேயா 2) சமாரியா 3) யூதேயா
   4) தெற்கு கலிலேயா 5) மேற்கு மலைத்தொடர்

6) எகிப்தில் களஞ்சிய நகர் கட்டுவதற்காக இஸ்ரயேல் மக்களை அடிமைகளாக்கியவர்
   1) இரண்டாவது இராம்சேஸ் 2) முதலாம் இராம்சேஸ் 3) முதலாவது அமோசிசு
   4) கைக்கோஸ் 5) சைரஸ்

- ***7 -11 வரையான வினாக்களுக்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.***

A – தாவீது அரசன் B – சாலமோன் அரசன் C – சவுல் அரசன்
D – தெபோரா E – ஒத்னியேல் F – சிம்சோன்

7) மொசப்பத்தேமிய அரசன் கூசான்ரிசத்தாயிடம் அடிமைப்பட்ட இஸ்ரயேல் மக்களை மீட்டவர்
   1) A 2) B 3) C 4) E 5) F

8) எபூசியரின் நகரமாகிய எருசலேமைத் தலைநகர் ஆக்கிக் கொண்டவர்
   1) C 2) D 3) A 4) E 5) B

9) "பையன் பிறப்பிலிருந்தே கடவுளுக்கென நாசீர் ஆக இருப்பான்" என ஆண்டவரின் தூதரினால் எடுத்துரைக்கப்பட்டவர்.
   1) F 2) A 3) B 4) C 5) E



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

10) "உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும் என இறைவனிடம் கேட்டவர்
1) A 2) B 3) C 4) D 5) F

11) பெஞ்சமின் குலத்தைச் சேரந்த கீசு என்பவரின் மகன்
1) A 2) B 3) C 4) E 5) F

12) எருசலேம் திருக்கோவிலை புதுப்பித்துக் கட்டுவதில் முக்கிய பங்காற்றியவர்
1) எஸ்ரா 2) செருபாபேல் 3) நெகேமியா 4) சைரஸ் 5) சேஸ்பட்சர்

13) இயேசுவின் பிறப்பைத் தொடர்ந்து பெத்தலகேமிலும் அதன் சுற்றுப் புறமெங்கும் இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகளை கொலை செய்யும்படி கட்டளை பிறப்பித்தவர்
1) ஆளுநர் அர்க்கலாவு 2) ஆளுநர் ஏரோது அந்திபாஸ் 3) ஆளுநர் ஏரோது பிலிப்பு
4) பெரிய ஏரோது அரசன் 5) ஆளுநர் பொந்தியு பிலாத்து

14) திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து நூல்களும் கிரேக்க மொழியில் 'தோரா' என அழைக்கப்படுகின்றது. இங்கு 'தோரா' என்பதன் கருத்து,
1) பழமொழி 2) பாடல்கள் 3) சட்டம்
4) கவிதைத் தொகுப்பு 5) இறைவாக்குகள்

15) இறைவனை, மனிதனோடு மிகவும் நெருக்கமுள்ளவராகவும் மனிதத்தன்மை உள்ளவராகவும் எடுத்துக் காட்டும் மரபு,
1) யாவே 2) எலோகிம் 3) இணைச்சட்டம் 4) குரு 5) யாவே, குரு

16) "மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்" என்பதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது,
1) இறைவன் விருப்பப்பட்டார்
2) அதிகாரத்தைப் பயன்படுத்துதல்
3) படைப்புக்களை ஆளுகை செய்வதற்காக
4) படைப்புக்களின் மத்தியில் மனிதன் உயர்ந்தவன்
5) படைப்புக்களை வழிபடுவதற்காக

17) புராதன காலத்தின் ஆரம்பக் கைத்தொழில்
1) மட்பாண்டத் தொழில் 2) விவசாயம் 3) மந்தை வளர்ப்பு
4) கட்டடம் கட்டுதல் 5) வீதி அமைப்பு

18) ஏதேன் தோட்டத்தில் காணப்பட்ட 'நன்மை, தீமை அறியும் மரம்' என்பது குறிப்பது,
1) இறைவனின் அதிகாரத்தைக் குறித்தல் 2) சுயநம்பிக்கை
3) கடவுளுடைய திட்டம் 4) சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல்
5) இறைவனின் கொடை

19) மனிதன் என்பதற்குரிய எபிரேயச் சொல்
1) அதமாஹ் 2) ஆதாமா 3) ஆபார் 4) அபாத் 5) ஷமார்

20) திருவிவிலியத்தின் நோக்கம் ஒழுக்கமும் நற்பயிற்சியும் கொண்ட கிறிஸ்தவர்களை உருவாக்குவதே எனக்கூறிய இறையியலாளர்
1) தூய தோமஸ் அக்குவைனாஸ் 2) தூய ஜெரோம்
3) தூய அகுஸ்தினார் 4) தூய ஜஸ்டின்
5) தூய சிப்ரியன்

(2x20=40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

## பகுதி II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01. 1) திருத்தூதர் யோவான் எழுதிய நூல்கள் 2 தருக? (2 புள்ளிகள்)

2) திருவிவிலியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபடுவதற்கான காரணம் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

3) இறை ஏவுதலின் வகைகள் மூன்று தருக. (6 புள்ளிகள்)

4) இறை ஏவுதலால் எழுதப்பட்ட திருமறை நூல்களின் நோக்கங்கள் நான்கு தருக. (8 புள்ளிகள்)

02. 1) புராதன பலஸ்தீனாவின் எல்லைகள் இரண்டினை எழுதுக. (2 புள்ளிகள்)

2) கலிலேயாக் கடல் பிரதேசத்தினைப் பற்றி இரண்டு விடயங்கள் எழுதுக? (4 புள்ளிகள்)

3) பாலஸ்தீனா பிரதேசத்தின் மேற்கு மலைப்பகுதியில் உள்ளடங்கும் பிரதேசங்கள் மூன்று தருக. (6 புள்ளிகள்)

4) இஸ்ரயேல் மக்கள் பலஸ்தீனாவில் குடியேறிய பின்னர் அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கினை விளக்குக? (8 புள்ளிகள்)

03. 1) வட அரசின் யாத்திரைத் தலங்கள் இரண்டின் பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)

2) இறைவன் ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குறுதிகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

3) இஸ்ரயேல் மக்கள் சாமுவேலிடம் அரசன் வேண்டும் என கேட்பதற்கு ஏதுவான காரணிகள் மூன்று தருக. (6 புள்ளிகள்)

4) சவுல் அரசனின் வாழ்வில் காணப்பட்ட சிறப்பான அம்சங்கள் நான்கினை விளக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி II

04. 1) இஸ்ரயேலரின் வரலாற்றில் சாலமோனின் ஆட்சிக்காலம் ஒரு பொற்காலம் எனக் கூறலாம். இக்கருத்தினை முன்வைக்கும் விடயங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

2) தாவீது அரசனின் வாழ்வில் காணப்பட்ட நற்பண்புகள் இன்றைய நாடுகளின் தலைவர்களுக்கு சவாலாகும். உதாரணங்கள் ஐந்து முன்வைத்து விளக்குக?(10 புள்ளிகள்)

05. 1) இறை வெளிப்பாடு என்றால் என்ன என்பதை ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக? (10 புள்ளிகள்)

2) வாய்மொழிப் பாரம்பரிய மரபுகளில் எலோகிம் மரபில் காணப்படும் மறை உண்மைகளை விளக்குக. (10 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

06. 1) படைப்பின் செயற்பாடு ஒரு திட்டமிட்ட ஒழுங்கு முறையில் கட்டியெழுப்பப்படுகின்றது. இதன் அடிப்படையில் படைப்புத் தொடர்பான முதலாவது கதையினை விபரிக்குக? (10 புள்ளிகள்)

2) இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் இறைவனோடும், மனிதனோடும், இயற்கையோடும் முறிவுறாத உறவை ஏற்படுத்த வேண்டும். இதனை மேற்கொள்ள எடுக்கும் தீர்மானங்கள் ஐந்தினை முன்வைத்து விளக்குக? (10 புள்ளிகள்)

07. 1) இறைவன் கொடுத்த அழைப்பிற்கு கீழ்ப்படிந்த ஆபிரகாமின் விசுவாச வாழ்வில் எதிர் கொண்ட சவால்களை ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக? (10 புள்ளிகள்)

2) இன்றைய தலைவர்கள் ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk